| UG–018 | BTM–11 |
|---|---|

# B.Litt. DEGREE EXAMINATION – DECEMBER, 2019.

First Year

இக்கால இலக்கியம்

Time : 3 hours | Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. பாரதி முதலில் பணியாற்றிய பத்திரிகையின் பெயர் யாது?
2. ———————— மணங்களைப் போற்றினார் பாவேந்தர்.
3. கண்ணதாசன் இயற்றிய நூல்கள் சிலவற்றின் பெயர்கள் ————————.
4. சுற்றுப்புறச் சூழல் என்றால் என்ன?
5. தொல்தமிழர் முருகனை எங்ஙனம் கண்டனர்?
6. முத்தமிழ் யாவை?
7. அன்பளிப்பு என்ற சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் யார்?

8. ஏர் எழுபது என்ற நூலின் நூலின் ஆசிரியர்.

9. புதுமைப்பித்தனின் இயற்பெயர் யாது?

10. சாபவிமோசனம் எக்கதையை மையமாக வைத்து எழுதப்பட்டது.

11. புதுமைப்பித்தனை மிகவும் பாதித்த பிரெஞ்சு எழுத்தாளர்கள் யாவர்?

12. பிரதாப முதலியார் சரித்திரம் என்ற நாவலின் ஆசிரியர் யார்?

13. தாய் புதினத்தின் ஆசிரியர் யார்?

14. பாத்திரப் படைப்பின் வகைகள் யாவை?

15. Flash Back என்பது நாவலில் எவ்வாறு கூறப்படுகிறது?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

16. குயில் பாட்டின் வடிவமைப்பு யாது?

17. கல்வியால் விளைவன —————— ——————.

18. ஆட்டனத்தியின் பண்புநலன்கள் யாவை?

19. குடபுலவியனார் சுட்டும் தீர்வு யாது?

20. அறநூல்கள் எதனை வற்புறுத்தின?

21. இசை எவ்வாறு முருகாகும்?

22. தமிழ் நாடகப் பேராசிரியர் பற்றி குறிப்பு வரைக.

பகுதி இ —($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

23. குயில் பாட்டின் கதையமைப்பை விளக்குக.

24. கண்ணதாசன் படைத்த வடிவங்களும் நூல்களும் குறித்து விளக்குக.

25. மருதி குறிப்பு வரைக.

26. சுற்றுப்புறச் சீர்கேட்டினைத் தடுக்கும் வழிமுறைகள் யாவை?

27. கு. அழகிரிசாமியின் இலக்கிய ஆளுமையை விளக்குக.

28. புதுமைப்பித்தன் வாழ்க்கை வரலாறு குறித்து விளக்குக.

29. பெண் என்னும் புதினம் காட்டும் சமுதாயம் பற்றி விளக்குக.

பகுதி ஈ —($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.

30. மகாகவி பாரதியாரின் படைப்புகள் குறித்துக் கட்டுரை வரைக.

31. ஆட்டனத்தி-ஆதிமந்தி கதையை இலக்கிய நயத்துடன் விளக்குக.

32. அருணகிரியாரும் பெண் உலகமும் குறித்துக் கட்டுரை வரைக.

33. புதுமைப்பித்தன் சிறுகதைகளின் போக்கை மதிப்பிடுக.

34. தமிழில் புதினங்களின் வகைகள் குறித்து விளக்குக.

---

| UG–019 | BTM–12 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – DECEMBER, 2019.

First Year

Tamil

இலக்கணம் — I (நன்னூல், எழுத்து, சொல்)

Time : 3 hours　　　　Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடை தருக.

1. சிறப்புப்பாயிரம் - குறிப்புத் தருக.

2. எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?

3. பகுபதம் என்றால் என்ன?

4. புணர்ச்சி என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?

5. உயிரீற்றுப் புணர்ச்சி என்றால் என்ன?

6. எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி குறிப்புத் தருக.

7. சாரியை எவ்வாறு வரும்?

8. விகாரப்பு புணர்ச்சி பொருள் கூறுக.

9. ஓரெழுத்து ஒரு மொழி சான்று தருக.

10. ஆய்தக் குறுக்கம் என்றால் என்ன?

11. ‘மூவிடம்’ – எவை?

12. வேற்றுமையின் வகைகள் யாவை?

13. மொழி மாற்றுப் பொருள்கோள் - குறிப்புத் தருக.

14. எகினப்புல், எகின்சிறை எவ்வாறு புணரும்?

15. குற்றியலுகரப் புணரியல் என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு
ஒரு பத்தியில் விடை தருக.

16. ‘நூன் மரபு’ விளக்கம் தருக.

17. பத்து என்ற எண்ணுப்பெயர், பிற எண்ணுப்பெயரோடு புணருமாற்றைக் கூறுக.

18. பொதுச் சாரியையின் வகைகளைக் கூறுக.

19. குழூஉக்குறி என்றால் என்ன? சான்று தருக.

20. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

21. ஒரு மொழிச் சொல் சான்று தருக.

22. ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல்லைக் கூறுக.

பகுதி இ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

23. நூலிற்கு அழகு எனும் பத்து யாது?

24. எழுத்துக்களின் வகைகள் எத்தனை? அவை யாவை?

25. காலம் காட்டு விகுதிகள் சான்றுடன் விளக்குக.

26. குறிப்பு வினையின் பொது இலக்கணம் விளக்குக.

27. ‘ஆறாம் வேற்றுமை’ – சான்றுடன் விளக்குக.

28. உம் என்ற இடைச் சொல் எவ்வெப்பொருளில் வரும் விளக்குக.

29. எழுத்துச் சாரியைகளை நன்னூல் வழி நின்று விளக்குக.

பகுதி ஈ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடை தருக.

30. சார்பெழுத்துக்கள் யாவை? விளக்கி வரைக.

31. எழுத்துக்களின் பிறப்பு முறையை விளக்கி, உயிரெழுத்துக்கள் பிறக்குமாற்றை உரைக்க.

32. வழக்கு எத்தனை வகைப்படும்? அவை யாவை?

33. இடைச் சொல்லின் பொருள்கள் யாவை? விளக்குக.

34. உரிச்சொல்லின் பொது இலக்கணம் தந்து விளக்குக.

---

| UG–020 | BTMAL-11 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION – DECEMBER, 2019

First Year

Tamil

தமிழக வரலாறும் பண்பாடும் (சார்புப் பாடம்)

Time : 3 hours　　　　Maximum marks : 75

பகுதி அ — ($10 \times 1 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரு தொடரில் விடை தருக.

1. இரு பருவக் காற்றுகள் எவை?

2. தமிழ் நாட்டில் கல்வெட்டுகள் காணப்படும் இடங்களின் பெயர்களை எழுதுக.

3. சந்திர குப்த மௌரியரின் ஆட்சிக் காலத்தில் தமிழகம் வந்த கிரேக்கத் தூதர் யார்?

4. தமிழ் நாட்டின் உயர்ந்த சிகரம் என்று அழைக்கப்படுவது எது?

5. சமண, பௌத்த சமயங்கள் யாருடைய ஆட்சிக் காலத்தில் சிறப்புப் பெற்று இருந்தது?

6. வீர சோழியத்தின் ஆசிரியர் யார்?

7. கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த மன்னர்கள் யாவர்?

8. கிழக்கு இந்திய கம்பெனியினர் தமிழகத்தின் எந்த இடத்தில் வாணிபம் செய்யத் தொடங்கினார்?

9. கட்டப் பொம்மன் எங்குத் தூக்கில் போடப்பட்டார்?

10. ஒத்துழையாமை இயக்கத்திற்குத் தலைமை தாங்கியவர் யார்?

11. ராபர்ட்-டி-நொபிலி இயற்றிய நூல்களுள் இரண்டனைக் கூறுக.

12. இந்தியாவிற்குள் வந்த முதல் ஐரோப்பியர் யார்?

13. பழைய கற்காலச் சின்னங்கள் காணப்படும் இடங்களை எழுதுக.

14. தாமிர வருணியின் வேறு பெயர் என்ன?

15. 'முப்பெரும் தலைவர்கள்' - யாவர்?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. வெளிநாட்டுக் குறிப்புக்கான ஆவணங்கள் சிலவற்றை எழுதுக.

17. நாட்டுப்புற கதைப்பாடல்கள் இரண்டன் பெயர்களை எழுதுக.

18. மதுரையை மீட்ட பாண்டியன் யார்?

19. பல்லவர் காலத்து இசைக் கருவிகளின் வகைகளை எழுதுக.

20. முதலாம் பரந்தகன் வெட்டிய ஏரிகள் யாவை?

21. வீரப் பெண்மணியாக ஆட்சி செய்த இளவரசி யார்?

22. புதுக்கவிதைகள் எழுதி வரும் கவிஞர்களின் பெயர்களை எழுதுக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. மொகஞ்சதாரோ ஹரப்பா நகரமைப்புக் குறித்து எழுதுக.

24. சங்க இலக்கியத்தில் அக-புறத் திணைகள் குறித்து எழுதுக.

25. தமிழகத்தின் இருண்ட காலம் எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?

26. பல்லவர் காலத்து ஊராட்சி முறையின் சிறப்புகளை எழுதுக.

27. தஞ்சைப் பெரிய கோயிலின் சிறப்புகளை எழுதுக.

28. கொங்கு நாட்டுப் போர் ஏன் நடந்தது? அதன் முடிவு யாது?

29. மருது சகோதரர்கள் பற்றிக் குறிப்பு வரைக.

பகுதி ஈ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

30. தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகளை விளக்கிக் கட்டுரை வரைக.

31. பல்லவர் காலக் கட்டடக் கலை குறித்து விவரிக்க.

32. சோழர் காலத்து நிர்வாக முறையைக் குறித்து எழுதுக.

33. நாயக்கர்கால நீதி முறையும், நீதி நிலையும் குறித்துக் கட்டுரை வரைக.

34. தமிழகமும் விடுதலைப் போரும் குறித்துக் கட்டுரை வரைக.

———————

| | |
|---|---|
| **UG-033** | **BLT-11** |

B.A./B.Lit. DEGREE EXAMINATION – DECEMBER 2019.

First Year

Tamil

மொழியியல்

Time : 3 hours | Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு விடைதருக.

1. மொழியியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

2. இந்தியாவில் தோன்றிய மொழியியல் எது?

3. ஒலியியல் பேச்சொலியை ஆராயும் துறை எது?

4. இதழின் செயலால் எழுதும் ஒலி எது?

5. சொட்டை ஒலி என்று அழைக்கப்படும் ஒலி எது?

6. ஒலியுறுப்புக்களின் வகைகள் யாவை?

7. உருபனைப் பொருள் தரும் மிகச் சிறிய ——————— என்கிறோம்.

8. வினைச்சொற்களை ————————, ———————— என இரண்டாகப் பிரிக்காலம்.

9. இரண்டு உறுப்புக்கள் பொருள் தரும் முறையில் இணைந்து நிற்கும் பொழுது அவ்வுறுப்புக்களை ———————— என்கிறோம்.

10. துணை நிலைக் கொள்கையின் வேறு பெயர் யாது?

11. வளைந்து நெளியும் ஆற்றலுடைய நெகிழ்ந்த ஒலியுறுப்புகளை வேகமாக ஆட்டுவதால் எவ்வகையான ஒலி எழும்?

12. ஒலிகளை ஆராயும் முறைகள் எத்தனை?

13. மூக்கறை வாயிலைத் திறந்த காற்றை அதன் வழியாக வெளியிடும் போது எவ்வகையான ஒலி பிறக்கின்றனது?

14. ஒட்டுக்களின் வகைகள் எத்தனை?

15. 'S' என்ற குறியீடு - வாக்கியத்தைக் குறிக்கும்.

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

16. கூட்டொலி எடுத்துக்காட்டுடன் விளக்குக.

17. மூக்கொலி குறித்து விளக்குக.

18. சொல்லியலின் மூன்று நிலைகளை எடுத்துரைக்க.

19. தன்மை இடப்பெயரை விளக்குக.

20. வகையொலி என்றால் என்ன?

21. மெல்லினத்தின் மாற்றொலிகள் குறித்து விளக்குக.

22. வருவொலி திரிபு - எடுத்துக்காட்டுடன் விளக்குக.

பகுதி இ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

23. இறுதி நிலை ஒலிகள் குறித்து விளக்குக.

24. நிலையொலித் திரிபு சான்றுகாட்டி எடுத்துரைக்க.

25. தொல்காப்பியர் உணர்த்தும் வெற்றுருபன்களை விளக்குக.

26. மூச்சொலிகள் என்றால் என்ன? விளக்குக.

27. வகையொலி விளக்கிக் கூறுக.

28. இடைநிலை மெய்மயக்கம் எடுத்துரைக்க.

29. மொழித் திரிபுகள் குறித்து விளக்குக.

பகுதி ஈ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு
விடை தருக.

30. நைடா கூறும் விதிகளைக் குறித்துக் கட்டுரைக்க.

31. மெய்யொலிகளை வகைப்படுத்திக் கட்டுரை வரைக.

32. ஒலியுறுப்புக்களும் காணும் அவற்றின் தொழிலும் குறித்து எழுதுக.

33. ஒலியன்களை வகை செய்யும் முறையை விவரிக்க.

34. சொல் வகைகள் குறித்துக் கட்டுரை வடிவில் எழுதுக.

---

| **UG-034** | **BLT-12** |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION – DECEMBER 2019.

First Year

Tamil

தமிழ் கற்பித்தல்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. தாய்மொழி கற்பித்தலின் நோக்கம், ஒன்றைக் கூறுக.

2. மனப்பதிவுகளையும், எண்ணங்களையும் பரிமாறிக் கொள்ளும் கருவி எது?

3. கல்வித்துறையில் மிகவும் அதிகமாகப் பயன்படுவது எது?

4. மொழியைக் கற்கத் தொடங்குவதற்கு அடிப்படைத் திறன் எது?

5. கேட்கும் திறனின் மூன்று பகுதிகள் யாவை?

6. மொழிப்பாடம் கற்பித்தலின் முக்கிய நோக்கம் என்ன?

7. ஐரோப்பியர்கள் வருகையால் ஏற்பட்ட நன்மை ஒன்றைக் கூறுக.

8. தமிழ் உரைநடையை எத்தனை வகையாகப் பகுக்கலாம்?

9. பாடம் பயின்றபின், செய்யும் பயிற்சி ஒன்றைக் குறிப்பிடுக.

10. பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளைக்குத் தரப்பட்ட விருது யாது?

11. மறைமலையடிகளின் இயற்பெயர் என்ன?

12. சிந்தாமணி என்ற நூலைப் பதிப்பித்தவர் யார்?

13. அந்நிய நாட்டு மொழிப்பெயர்ப்பில் எதைப் பின்பற்றும் வழக்கம் கிடையாது?

14. உயர்தனி மொழியைப் பயிலுவதன் நோக்கம் என்ன?

15. ஆங்கிலச் சொல்லை மொழிபெயர்க்கும்போது இடையூறாகத் தோன்றும் சொற்கள், சிலவற்றைக் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு
ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. கல்வியின் பயன்கள் சிலவற்றைக் கூறுக.

17. தொலைக்காட்சியின் பயன்கள் யாவை?

18. நகைச்சுவையின் கதைகள் இரண்டனைக் கூறுக.

19. வாய்விட்டுப் படித்தலின் இன்றியமையாமையைக் கூறுக.

20. படித்தலில் விரைவு என்றால் என்ன?

21. இலக்கணம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

22. காந்திய நூல்கள், இரண்டினைக் கூறுக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு
ஒரு பக்க அளவில் விடை தருக.

23. நடிப்பு முறை கற்பித்தலின் நன்மைகள் யாவை?

24. வாய்மொழித் தொடர்பு பற்றி விவரிக்க.

25. அகராதி பயன்படுத்தும் முறையை எழுதுக.

26. செய்யுளின் இலக்கணம் பற்றி விவரி.

27. பள்ளி நூலகத்தின் அவசியத்தை எழுதுக.

28. கற்றலில் பாட நூலின் இடம் பற்றி விளக்குக.

29. வரியமைப்புப் பாடத்திட்டம் பற்றி விளக்குக.

பகுதி ஈ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு
மூன்று பக்க அளவில் விடை தருக.

30. தாய்மொழியைக் கற்பிக்கும் முறைகள் பற்றிக் கட்டுரைக்க.

31. எழுதுந்திறனை வளர்ப்பதன் தேவையும், நோக்கங்களையும் கட்டுரைக்க.

32. உரைநடை கற்பிக்கும் முறைகள் யாவை?

33. பாடநூல் பற்றி விரிவான கட்டுரை வரைக.

34. பாடத்திட்டம் பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்க.

———————